# 28-11-2024 செய்தி

## தமிழ்நாட்டுக்குத் தேவை, தடையற்ற உள்ளாட்சித் தேர்தலே!

**உருவாக்கப்பட்ட குழப்பம்**

- நகர்ப்புற உள்ளாட்சிகளைத் தரம் உயர்த்தும்போது அருகில் உள்ள ஊராட்சிகளை இணைப்பது வழக்கமான நடவடிக்கைதான் எனவும், அதனால் ஏற்படும் வார்டுகளின் மறுவரையறைப் பணிகள் முடியும் வரை தேர்தல் நடத்துவது தள்ளிப்போகலாம் எனவும் குறிப்பிட்டிருக்கிறார் கட்டுரையாளர்.
- இங்கு நாம் கவனிக்க வேண்டியது, நூற்றுக்கணக்கான கிராம ஊராட்சிகளை வலுக்கட்டாயமாக நகரங்களோடு இணைக்கும் முயற்சி என்பது வழக்கமான நடவடிக்கை அல்ல.
- இது தேர்தல் நேரத்தில், அரசு உருவாக்கியிருக்கும் குழப்பம் என்றே கருத வேண்டியுள்ளது. வார்டு மறுவரையறையைக் காரணமாகக் குறிப்பிடும்போது, நீதிமன்றம்கூட அதில் தலையிட முடியாது என்ற வாய்ப்பினைப் பயன்படுத்தித்தான் கடந்த முறை (2016ஆம் ஆண்டு) அஇஅதிமுக அரசு மாவட்டங்களைப் பிரிக்கிறோம் என்ற பெயரில் உள்ளாட்சித் தேர்தலை நடத்தாமல் காலம் தாழ்த்தியது.
- தற்போது திமுக அரசு, உள்ளாட்சிகளைப் பிரிக்கிறோம் என்ற பெயரில் வார்டு மறுவரையறை என்ற அதிமுக எடுத்த அதே குறுக்கு வழியைக் கையில் எடுத்திருக்கிறது.
- ஊராட்சிகளை நகர்ப்புற உள்ளாட்சிகளோடு இணைக்கும் நடவடிக்கைகூட, உள்ளாட்சித் தேர்தலைத் தள்ளிப்போடுவதற்கான அரசின் ஓர் உத்தியோ என்ற சந்தேகம் சமூகச் செயற்பாட்டாளர்கள் மத்தியில் உள்ளது.

**தனி அலுவலர்கள் மூலம் நகரமயமாக்கல்**

- எந்த ஒரு கிராம ஊராட்சியின் கிராமசபையிடமும் ஒப்புதல் பெறாமல், வலுக்கட்டாயமான நகரமயமாக்கல் முயற்சி நடந்துவருவதாகத் தகவல்கள் வருகின்றன.
- பல கிராம ஊராட்சிகளில் மக்கள் தங்கள் ஊராட்சியை நகரங்களோடு இணைக்கக் கூடாது ஊராட்சியாகவே அது இருக்க வேண்டும் எனப் போராடி வருகிறார்கள்.
- மேலும், தேர்தலை நடத்தாமல், வட்டார வளர்ச்சி அலுவலர்களைத் தனி அலுவலர்களாக நியமித்துத் தீர்மானங்களை இயற்றி, மக்களின் எதிர்ப்பையும் மீறி, கிராம ஊராட்சிகளை நகரங்களோடு அரசு இணைத்துவிடுமோ என்கிற அச்சமும் மக்கள் மத்தியில் நிலவிவருகிறது.
- மேலும், 2016 முதல் இருந்த தனி அலுவலர்காலத்தில், ஊழல்கள் அதிகரித்தன என்கிற குற்றச்சாட்டுகள் உள்ள நிலையில், உரிய காலத்தில் உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதே சரியான அணுகுமுறையாக இருக்கும்.
- ஒரே நேரத்தில் அனைத்து உள்ளாட்சித் தேர்தல்களும் கடந்த காலங்களைப் போல நடத்தப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.
- ஆனால் தற்போது உருவாக்கப்பட்டிருக்கும் இந்த இடைவெளி நிரப்பப்பட வேண்டும் என்பதற்காக முன்வைக்கப்படும் ‘தனி அலுவலர் நிர்வாக முறை’ என்பது, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு மாற்றான தீர்வாக எந்த விதத்திலும் இருக்க முடியாது. மேலும், இது ஜனநாயகத்தை வலுப்படுத்த உதவாது.
- எனவே, அரசுகள் நினைத்தால் எப்போது வேண்டுமானாலும் உள்ளாட்சித் தேர்தலை நிறுத்திக்கொள்ளலாம்; இடைப்பட்ட காலத்தில் மக்கள் பிரதிநிதிகளுக்கு மாற்றாகத் தனி அலுவலர்களைக் கொண்டு நிர்வாகம் செய்துவிடலாம் என்கிற அரசியல் கணக்குகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது.
- அரசியல் கணக்குகளுக்காக மீண்டும் தனி அலுவலர் நிர்வாகத்தை இயல்பாக்குவதை ஜனநாயக சக்திகள் ஏற்றுக்கொள்ளக் கூடாது. உள்ளாட்சியில் தனி அலுவலர்கள் நிர்வாகம் என்பது மாநிலத்தில் ஆளுநர் நிர்வாகம் செய்வதற்கு ஒப்பானதாகும்.

**ஒரே நாடு ஒரே தேர்தல் போலவா?**

- வெவ்வேறு மாவட்டங்களில் உள்ளாட்சித் தேர்தல்கள் வெவ்வேறு காலத்தில் நடைபெற்றாலும் வளர்ச்சிப் பணிகள் முழுக்க முழுக்க உள்ளூர் அளவில் நிர்வாகம் சார்ந்ததாகவே இருக்கின்றன.
- தேர்தல் வெவ்வேறு காலத்தில் நடப்பதால், கிராம அளவிலோ நகர உள்ளாட்சி அளவிலோ திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எந்தத் தடையும் இல்லை.
- மேலும், கடந்த முறை 27 மாவட்டங்களைத் தவிர மீதமுள்ள ஒன்பது மாவட்டங்களுக்குமான ஊரக உள்ளாட்சித் தேர்தல், நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான தேர்தல் வெறும் இரண்டு–மூன்று மாத இடைவெளியில் நடைபெற்று முடிந்தன. அவற்றை ஒரே வேளையில் நடத்துவதில் எந்தச் சிக்கலும் இல்லை.
- இந்தியா போன்ற பன்மைத்துவச் சமூகத்தில் ஒரே நேரத்தில் எல்லாத் தேர்தல்களையும் நடத்த வேண்டும் என்கிற ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ போன்ற முன்வைப்புகளோ அல்லது ஒருங்கிணைந்த உள்ளாட்சித் தேர்தல் என்கிற முன்வைப்போ அடிப்படையில் ஜனநாயகத்துக்கு எதிரானவை.

**தடையற்ற உள்ளாட்சித் தேர்தல்**

- உரிய காலத்தில் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தாமல் அவற்றைத் தள்ளிப்போடுவது என்பது ஜனநாயக விரோதமானது; நம் அரசமைப்புச் சட்டத்தின் அதிகாரப் பரவல் நோக்கங்கள், ஜனநாயக விழுமியங்கள் ஆகியவற்றுக்கு எதிரானது.
- நாடாளுமன்றத் தேர்தல்களையும், சட்டமன்றத் தேர்தல்களையும் இப்படித் தள்ளிப்போட முடியுமா? எதிர்க்கட்சிகளும் ஊடகங்களும் சும்மா இருந்து விடுமா? மிக முக்கியமான கேள்வி என்னவென்றால், ‘தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல் என்பது, மாநில அரசுகளின் விருப்பத்துக்கு ஏற்ப அல்லது ஆளுங்கட்சியின் அரசியல் கணக்குகளுக்கு ஏற்ப நடைபெறும் என்ற சூழலை நாம் அனுமதிக்கப் போகிறோமா ?’ என்பதுதான்.
- ஒருங்கிணைந்த உள்ளாட்சித் தேர்தல் என்பதல்ல. மாறாக, ‘தடையற்ற உள்ளாட்சித் தேர்தல்’ என்பதே நாம் முன்வைக்க வேண்டிய கோரிக்கை, அதுவே ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை உள்ள அனைவரின் விருப்பமும் கூட.

# ஆறுதல் அளிக்கும் முடிவு!

**இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தம்:**

- மேற்கு ஆசியாவின் போர்ப் பதற்றம் சிறிதளவு தணிந்திருக்கிறது. அமெரிக்க தலையீடு காரணமாக இஸ்ரேல்-ஹிஸ்புல்லா இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்துள்ளது.
- அதன் காரணமாக கடந்த 13 மாதங்களுக்கும் மேலாக இரு தரப்பினருக்கும் இடையே நடைபெற்று வந்த மோதல் இடைக்கால முடிவுக்கு வந்திருக்கிறது. லெபனான்- இஸ்ரேல் மக்களுக்கு நிம்மதிப் பெருமூச்சையும் ஏற்படுத்தியுள்ளது.
- ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா லெபனானில் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. தெற்கு லெபனானில் ஹிஸ்புல்லாவின் கட்டமைப்புகள் வலுவாக உள்ளன.
- இப்போதைய போர் நிறுத்தத்தைப் பயன்படுத்தி, அடுத்த இரு மாதங்களில் தனது நிலப் பகுதியை லெபனான் நாட்டு ராணுவம் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும்.
- லெபனானில் உள்ள தனது படைகளை இஸ்ரேல் படிப்படியாக விலக்கிக் கொள்ள வேண்டும்; இரு நாட்டு குடிமக்களும் விரைவில் தங்கள் வசிப்பிடங்களுக்குப் பாதுகாப்பாக திரும்பி, தங்கள் இயல்பு வாழ்க்கையை மீண்டும் கட்டமைக்கலாம் என்பவை ஒப்பந்தத்தின் – குறிப்பிடத்தக்க அம்சங்கள்.
- பாலஸ்தீனத்தின் காஸா முனையை ஆட்சி செய்து வந்த ஹமாஸ் ஆயுதக் குழுவினர் இஸ்ரேலில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் நடத்திய தாக்குதல் உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது.
- தரை, கடல், வான்வழியாக ஹமாஸ் படையினர் தாக்குதல் நடத்தி, இஸ்ரேலுக்குள் புகுந்து சுமார் 1,200 பேரை சுட்டுக் கொன்றனர். 200-க்கும் மேற்பட்டோரை பிணைக் கைதிகளாக பிடித்துச் சென்றனர்.
- இதற்குப் பதிலடியாக இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காஸா முனை பகுதி தரைமட்ட மாகிவிட்டது. ஹமாஸ் ஆயுதக் குழுவினரைக் குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்தாலும் அங்கு பெரும்பாலும் உயிரிழந்தது அப்பாவி பொதுமக்கள்தான்.
- காஸாமுனையில் தாக்குதலைத் தொடங்கிய சில நாள்களிலேயே ஒட்டுமொத்த மக்கள்தொகையில் பாதிபேர் தங்களது இருப்பிடங்களைவிட்டு இடம்பெயர வேண்டிய அவலம் ஏற்பட்டது.
- மருத்துவமனைகள், வழிபாட்டுத்தலங்கள் என பாதுகாப்பான பகுதிகளாகக் கருதி தஞ்சமடைந்த இடங்களிலும் இஸ்ரேல் விமானப் படைகள் நடத்திய தாக்குதலில் குழந்தைகள் உள்பட பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
- இஸ்ரேல் தாக்குதலில் காஸாவில் இதுவரை 44,000-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.
- லட்சக்கணக்கானோர் வசிப்பிடங்களை இழந்து உள்நாட்டிலேயே அகதிகளாக உள்ளனர்.
- காஸாவில் ஹமாஸும், லெபனானில் செயல்பட்டுவரும் ஹிஸ்புல்லாவும் ஈரானின் ஆதரவு பெற்றவை. இஸ்ரேலுக்கு எதிரான செயல்பாடுகளுக்காக அந்த அமைப்புகளுக்கு ஈரான் ஆயுத உதவிகளைச் செய்துவருவதாக இஸ்ரேலும் அமெரிக்காவும் குற்றஞ்சாட்டி வருகின்றன.
- இந்தப் பின்னணியில் ஹமாஸுக்கு ஆதரவாக லெபனானில் செயல்பட்டுவரும் ஹிஸ்புல்லா களம் இறங்கியது. ஹமாஸ்-இஸ்ரேல் போரை விரிவுபடுத்தியது. ஹிஸ்புல்லா அமைப்பினரை ஒடுக்கும் வகையில் லெபனான் மீதும் இஸ்ரேல் தாக்குதலைத் தொடங்கியது. மேற்கு ஆசியாவில் மேலும் பதற்றத்தை ஏற்படுத்தியது.
- லெபனானில் முதலில் வான்வழித் தாக்குதலை மேற்கொண்ட இஸ்ரேல், பின்னர் தரைவழித் தாக்குதலையும் நடத்தியது.
- இஸ்ரேலின் ட்ரோன் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டதும், இரு தரப்பினருக்குமான போர் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அது நடக்கவில்லை. பதிலடியாக இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பினர் ஏவுகணைத் தாக்குதலை தொடர்ந்து நடத்தி வந்தனர்.
- லெபனானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இதுவரை 3,800-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 15,000 பேர் காயமடைந்துள்ளனர். லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பினருக்கு இஸ்ரேல் வைத்த குறியில் குடியிருப்புகள், அரசுக் கட்டடங்களும் தப்பவில்லை. ஒரு லட்சம் வீடுகள் உள்பட சேதமடைந்த சொத்துகளின் மதிப்பு 850 கோடி டாலர். 12 லட்சம் பேர் வீடுகளை இழந்தனர்.
- அதேபோன்று லெபனான் எல்லையையொட்டிய நகரங்களில் வாழும் தனது நாட்டு குடிமக்கள் 60,000 பேரை பாதுகாப்பு கருதி இஸ்ரேல் வெளியேற்றியது. இஸ்ரேல் தரப்பில் பொதுமக்கள் 40 பேர் உள்பட 70 பேர் உயிரிழந்தனர். தரைவழித் தாக்குதலின்போது தனது 50 வீரர்களையும் இஸ்ரேல் இழந்தது.
- ஹமாஸ் படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட பிணைக் கைதி களை மீட்பதற்காக அமெரிக்காவின் முயற்சியால் இதற்கு முன்பு சில முறை மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்தம் பெரிய அளவில் பலன் தரவில்லை.
- சொற்ப எண்ணிக்கையிலான பிணைக் கைதிகளும், அதற்குப் பதிலாக இஸ்ரேல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பாலஸ்தீனர்கள் சிலரும்தான் விடுவிக்கப்பட்டனர். அதேபோன்ற நிலை இஸ்ரேல்-ஹிஸ்புல்லா போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு ஏற்படாமல் இருக்க வேண்டும்.
- ஏனெனில், இதற்கு முந்தைய போர்களில் பலமுறை இதுபோன்ற ஒப்பந்தங்களை இஸ்ரேல் மீறியிருக்கிறது.
- தனது பதவிக் காலம் நிறைவடையும் நிலையில் இஸ்ரேல்- ஹிஸ்புல்லா இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ஏற்படுத்தியுள்ளார்.
- அமெரிக்காவின் அடுத்த அதிபர் டொனால்ட் டிரம்ப்புக்கு இந்தப் பெருமை சென்றடையக்கூடாது என்கிற பைடனின் எண்ணமும் இந்தப் போர் நிறுத்த முயற்சிக்குப் பின்னணியில் இருப்பதை ஒதுக்கிவிட முடியாது.
- அமெரிக்காவின் முயற்சிக்குப் பின்னணி என்னவாக இருந்தாலும், போரில் பொதுமக்கள் உயிரிழக்காமல் தடுக்கும் எந்த ஒரு நடவடிக்கையையும் உலக நாடுகள் முழு மனதுடன் வரவேற்கும். காஸாவிலும் நடவடிக்கையையும் இதுபோன்ற போர் நிறுத்தத்துக்கு அமெரிக்கா வழிகோல வேண்டும்.